# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2106/33 - 2019 ජනවාරි මස 18 වැනි සිකුරාදා - 2019.01.18

*2106/33 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை

**2019 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கக் கட்டளை**

எனது இல. : 4-3/2/2018/ஸீஈபீ/40.
பிரதேச செயலாளர் இல. : எம்அய்எல்/எல்4/2/94.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2019, சனவரி 10.

அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், மில்லதெனிய.

2. **காணியின் விபரம்**: மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மில்லதெனிய பிரதேச செயலாளர் பிரிவில், முன்வத்த பாகே பத்துவ/ ரய்கம் கோறளை சிறு பிரிவில், கென்னன்துடாவ (652) கிராம உத்தியோகத்தர் பிரிவில் மற்றும் கென்னன்துடாவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.09.28 ஆம் திகதிய கேஏ/எம்அய்எல்/ 2018/ 287 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு :

01. **துண்டு** A - **ஜம்புகஹவத்தை - விஸ்தீரணம் : 0.3502 ஹெக்டயார்**

வடக்கு : வீதி மற்றும் விஜேசிங்ஹ விதானகே யசவதீ உரிமை கோரும் ஜம்புகஹவத்தை ; கிழக்கு : கால்வாய் ; தெற்கு : உரிமை கோருபவர் கண்டுபிடிக்க இயலாத முத்தெட்டுவேகும்புர மற்றும் வீதி (பிரதேச சபை) ; மேற்கு : வீதி (பிரதேச சபை), வீதி, இக் காணியின் எஞ்சிய பகுதி மற்றும் வீதி.

02 - 116

1A – G29278 – 26 (2019/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.